بسم الله الرحمن الرحيم

المكتب التعاوني للدعوة
والإرشاد وتوعية الجاليات
بالنسيـــم

أعمال أيام الحج

`[;[{ila ehl;fspy;

xUtH

nra;aNtz;ba mky;fs;

اللغة التاميلية

6

ترجمة: حبيب لبي عليار

للمكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالنسيم
تحت إشراف وزارة الشئون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
خلف مستشفى اليمامة- حي المنار- ص. ب : 51584- الرياض 11553
هاتف: 2350194–2350195–2328226 – فاكس: 2301465

TRANSLATED: HABEEB LEBBE ALIYAR

THE COOPERATIVE OFFICE FOR CALL & GUIDANCE
AT AL-NASEEM RIYADH –OPPOSITE OF OUTPATIENT CLINIC BEHIND,
AL- YAMAMA HOSPITAL AL- MANAR AREA – P.O.BOX : 51584
RIYADH: 11553 , TEL : 2328226- 2350195- 2350194 FAX : 23011465

www.qurankalvi.com

`ஜ் உம்றாவின் ஒழுக்க விதிகள் :

இது பற்றி அல்லாஹு தஆலா பின்வருமாறு கூறுகிறான்.:

' ஹஜ்ஜுக்குரிய காலம் (ஷவ்வால், துல் – கஅதா, துல்–ஹஜ் மாதத்தின் பத்தாம் நாள் அதிகாலை வரையுள்ள) அறியப்பட்ட மாதங்களாகும். ஆகவே அவற்றில் எவரொருவர் (இஹ்றாம் மேற்கொள்வத ன்முலம்) ஹஜ்ஜை (த்தன்மீது) கடமையாக்கிக் கொ ண்டால் தாம்பத்திய உறவு கொள்வதும், கெட்ட பேச்சுக்களைப் பேசுவதும், வீண் தர்க்கம் செய் வதும் ஹஜ்ஜில் கூடாது. இன்னும் நன்மையிருந்து நீங்கள் செய்யும் ஒவ்வொன்றையும் அல்லாஹ் அறி வான். ஆகவே ஹஜ்ஜுடைய பிரயாணத்திற்கு வே ண்டியவற்றை) தயார் செய்து வைத்துக் கொள்ளு ங்கள். நிச்சயமாக தயார் செய்து வைப்பவற்றில் மிகச்சிறந்தது பயபக்தியே ஆகும். ஆகவே நல்லறி வுடையோர்களே என்னையே பயந்து (நடந்து) கொ ள்ளுங்கள்.' (2: 197)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினா ர்கள் 'நிச்சயமாக (இறையில்லமான) கஅபாவைத் தவாப் செய்வதையும், ஸபா,மர்வா ஆகியவற்றுக்கி டையில் ஸஈ செய்வதையும், ஜெம்றாக்களுக்கு கல் லெறிவதையும் அல்லாஹ் பற்றிய நினைவை நிலை நாட்டுவதற்காகவே ஏற்படத்தப்பட்டுள்ளது'

மேலும் கூறினார்கள்: 'ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக் குரிய கூலி சுவர்க்கத்தைத் தவிர வேறில்லை.'

எனவே ஹஜ் செய்யக்கூடிய ஒருவர், அல்லாஹ்வை கண்ணி யப்படுத்தி, அவனையே நேசித்து, அவனுக்கே அடிபணிந்து செ யல்படுவதை இந்த ஹஜ் கிரியைகள் மூலம் நோக்கமாகக் கொ ள்ள வேண்டும்.

ஹஜ் என்பது, விளையாட்டு, பொழுது போக்கு என்பவற்றிக் கான சுற்றுப்பயணம் (உல்லாசப் பயணம்) எனவும், அதனை ஒரு வர் நினைத்தவாறெல்லாம் மேற்கொள்ள முடியும் எனவும் நாம் நினைத்து விடக்கூடாது. சிலர் அல்லாஹ்வின் நினைவை மறக் கடித்து, பாவத்தில் வீழ்த்தக்கூடிய ஆடல், பாடல் சாதனங்க ளை தம்முடன் எடுத்துச் செல்வதையும், இன்னும் பலர் விளை யாட்டு, கேளிக்கை, சிரிப்பு, பிறரை பரிகாசம் செய்தல் போன்ற இஸ்லாத்திற்கு மாற்றமான விஷயங்களில் அளவு மீறி ஈடுபடுவ தையும் நாம் காணமுடிகிறது. ஹஜ் என்பது வெறுமனே விளை யாட்டிற்கும்,

செலுத்தவேண்டும். மேலும் அவர் ஹஜ் செய்யவரும் ஏனைய ஹாஜிகளுக்கு உதவுவதிலும், தேவைப்படும் போது வழிகாட்டு வதிலும், உபதேசிப்பதிலும் கவனம் செலுத்துதல் அவசியமா கும். அவர்களில் பலகீனர்களுடன் (அன்பாக நடந்து கொள்வ தும்) குறிப்பாக கருணையுடன் நடக்கவேண்டிய இடங்களில்

முக்கியமாக, சன நெருக்கடியான இடங்களில் கருணையுடன் நடந்து கொள்வதும் அவசியமாகும். ஏனெனில், படைப்புக்க ளுக்கு கருணை காட்டுவதன் மூலம் படைப்பாளனின் கருணை யைப் பெற்றுக் கொள்ள முடியும். நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களில் கருணை காட்டுபவர்களுக்கே தானும் கருணை காட்டுகின்றான். மேலும் தாம்பத்திய உறவு, வீண் பேச்சுக்கள், வீண் தர்க்கம் போன்றவற்றைத் தவி ர்க்க வேண்டும். எனினும் சத்தியத்தைக் காப்பதற்காகத் தர்க் கம் புரிவது சில சந்தர்ப்பங்களில் அவசியமாகின்றது. அத்து டன் இறை படைப்புக்களில் அத்து மீறுவதும். துன்புறுத்துவ தும் தவிர்க்கப்பட வேண்டும். புறம் பேசுதல், கோள் சொல்லு தல், தூற்றுதல், சண்டை சச்சரவுகளில் ஈடுபடல், அன்னிய பெண்களைப்பார்த்தல் போன்றவற்றையும் தவிர்க்கவேண்டும். இவை இஹ்றாம் அல்லாத நேரங்களிலும் விலக்கப்பட்டவைக ளே. இருப்பினும் இஹ்றாமுடைய நேரத்தில் மிகவும் கண்டிக் கப்பட்ட விடயங்களாகும்.

(முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன்)

`ஜ்ஜுடைய கிரியைகள் :

கீழ் வரும் விடயங்கள் ஹஜ் செய்ய நாடிய ஒருவர், தான் ஹஜ் பய ணத்தை ஆரம்பித்ததிலிருந்து ஹஜ்ஜில் நுளையும் வரை மேற் கொள்ள வேண்டிய சில விடயங்களாகும்.

1–முதலில் நோக்கம் தூய்மையானதாக இருக்கவே ண்டும். இக்கடமையின் மூலம் மறுமையின் கூலியையும், அல் லாஹ்வால் குறிப்பிடப்பட்டுள்ள பயன்களையும் அடைந்து கொ ள்வதையே நோக்கமாகக் கொள்ளவேண்டும். மேலும் அல்லா ஹ்வுக்காகவே இதனை மேற்கொள்வதாக எண்ணிக் கொ ள்வதோடு, பிறரின் புகழ், பாராட்டு, முகஸ்துதி போன்ற அற்ப நோக்கங்களிலிருந்து இதனைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வும் வேண்டும்.

2–(ஹஜ் பயணத்திற்காக ஒரு ஹாஜி தன்னுடன் எடுத்துச் செ ல்பவைகள்) மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட வழிக ளில் தேடிய உழைப்பாகவும், விலக்கப்பட்டவற்றி லிருந்து தூய்மை பெற்றதாகவும் இருக்கவேண்டும். தூய வழியில் உழைப்பதானது, ஸாலிகான ஒரு அமலாகக் கரு தப்படும். அதற்கு அல்லாஹ்விடத்தில் பன்மடங்கு நன்மைகள் உண்டு. பாவமான (ஹறாமான) சந்தேகத்திற்கிடமான உழைப்பு க்களை விட்டும் விலகி இருத்தல் வேண்டும்.

3–பொதுவாக ஒரு ஹாஜியிடம், மார்க்கம் பற்றிய அறிவும் இரு க்க வேண்டும். குறிப்பாக ஹஜ்ஜின் விடயங்கள் பற்றித் தெரிந்திருத்தல் வேண்டும். ஹஜ்ஜின் போது செய்யவே ண்டிய விடயங்கள் பற்றியும், அதனை எவ்வாறு நடைமுறைப்படு த்த வேண்டும் என்பது பற்றியும் அவர் அறிந்திருக்கவேண்டும். மார்க்க அறிஞர்களால் எழுதப்பட்டுள்ள ஹஜ் சம்மந்தமான புதிய, பழைய கைநூல்களையும் வாசித்துக் கொள்ளவேண்டும்.

4–தனது விடயங்களைப் பிறரின் துணையின்றித் தானே

செய்து கொள்வதில் கவனம் செலுத்தல் வேண்டும். தன்னால் முடிந்த விடயங்களில் பிற சகோதரர்களுக்கு உதவி செய்து கொள்ளவும் வேண்டும்.

5–பிரயாணத்தின் போது, நபிகளாரின் வழி முறையைப் பேண வேண்டும். குறிப்பாக, வாகனத்தில் ஏறி இறங்கும் போதும், புதிய ஊரைச் சென்றடையும் போதும் கூறவேண்டிய பிரார்த்தனைகளை ஓதிக் ˙கொள்ள வேண்டும்.

6–மீக்காத்தைச் சென்றடைந்ததும், தேவை ஏற்படின் தன் னைச் சுத்தப்படுத்திக் கொள்வது சுன்னத்தாகும். அக்குள், மர்மப் பகுதி மயிர்களைக் கழைந்து கொள்வதோடு, மீசையை நன்றாகக் குறைத்துக் கொள்வதும், நகங் களை வெட்டிக்கொள்வதும் சுன்னத்தாகும் (இஹ்றா மின் பின் தன் நகங்களால் பிறருக்குத் தீங்கேதும் ஏற்படா தென்றிருப்பின் அதனை வெட்டாதிருப்பதில் குற்றமில்லை.) பின்னர் குளித்துக் கொள்வதும் சுன்னத்தாகும்.

7–பின்னர் இஹ்றாம் துணியை அணிந்து கொண்டு, தான் செய்ய இருக்கும் உம்றா அல்லது ஹஜ் கடமைக்கான நிய் யத்தை மனதில் நினைத்து நாவினால் மொழியவேண் டுடம் (ஹஜ், உம்றா தவிர்ந்த ஏனைய இபாதத்துக்களில் நிய்ய த்தை நாவினால் மொழிவது 'பித்ஆ' எனும் தடுக்கப்பட்ட செய லாகும்.) பின்னர் தல்பியாக் கூற வேண்டும்.

8–நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய அதே அடிப்படையில் அதிகமதிகமாக தல்பிய்யாக் கூறு வது சிறந்தது. குறிப்பாக வாகனத்தில் ஏறி இறங்கும் போது அல்லது கடமையான தொழுகையை நிறைவேற்றினால் அல் லது பிறர் தல்பிய்யாக் கூறுவதைக் கேட்டால் அல்லது மேடு பள்ளங்களில் ஏறி இறங்க நேரிட்டால் அல்லது இரவு பகலை எதிர் கொள்ளும், போது தல்பியாக் கூறுவது சாலச்சிறந்தது. தல்பியாவின் வாசகம் பின்வருமாறு.

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ، لَبَّيْكَ لاَ شَرِيْكَ لَكَ لَبَّيْكَ،
الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لاَ شَرِيْكَ لَكَ ' إِنَّ

சஷசஷலப்பைக் அல்லாஹும்ம லப்பைக், லப்பைக் லா ஷரீக்க லக், லப்பைக், இன்னல் ஹம்த வன்நி.. மத லக வல்முல்க்க, லா ஷரீக்க லக்**

பொருள் : வந்து விட்டேன், இறைவா உன்னிடமே வந்து விட் டேன், உன்னிடமே வந்து விட்டேன், உனக்கு யாதொரு இணை யுமில்லை. உன்னிடமே வந்து விட்டேன், நிச்சயமாக புகழும், அருட்பாக்கியங்களும், ஆட்ச்சியும் உனக்கே உரியன, உனக்கு யாதொரு இணையுமில்லை.

9–நேரகாலத்தோடு ஹஜ்ஜிற்கு புறப்பட்டு வருபவராக இருந் தால், முதலில் உம்றாவுக்காக மாத்திரம் நிய்யத் வைப்பது சிறந் தது. உம்றாவுக்குரிய கிரியைகளை நிறைவேற்றி விட்ட பின் எட் டாம் நாள்வரை இஹ்றாமைக் களைந்திருந்து விட்டு, எட்டாம் நாளன்று தன் இருப்பிடத்திலிந்தே ஹஜ்ஜிற்காக இஹ்றாமை
அணிந்து கொண்டு அதற்குரிய நிய்யத்தை மனதில் நினைத்து,

நாவினால் மொழியவும் வேண்டும். ஹஜ்ஜிற்கான இஹ்றாமின் போது, ஏற்கனவே மீக்காத்தில் செய்தது போன்று மேற்கொள்ள வேண்டும்.

காலதாமதமாகி வந்தால், ஹஜ்ஜிற்காக மாத்திரம் இஹ்றாம் கட்டி ஜம்றாக்களுக்கு கல் அடித்து முடியும் வரை இஹ்றா முடன் இருக்கவேண்டும். உம்றாவை அவ்வருடம் பூரணமாக நிறைவேற்றும் நோக்கில் பிற்படுத்தலாம். மீண்டும் உம்றா வுக்காக பிரயாணம் மேற் கொள்வது கஷ்டமாக இருந்தால், உம்றாவையும், ஹஜ்ஜையும் ஒன்றாகச் சேர்த்து கிரான் முறைப்ப டியும் நிறைவேற்றலாம்.

10–உம்றாவுக்காக மாத்திரம் இஹ்றாம் மேற்கொண்டிருந்தால், மக்காவை அடைந்ததும் உம்றாவுக்கான தவாபை முதலில் செ ய்ய வேண்டும். கிறான் அல்லது இப்றாத் முறைப்படி ஹஜ்செய்ய நாடியிருந்தால், தவாபுல் குதூமை முதலில் மேற் கொள்ளலாம். அதனை மேற்கொள்வதற்கு கஷ்டமாக இருப்பின் அதனை மே ற்கொள்ளவேண்டிய அவசியமில்லை. உம்றா மாத்திரம் செய்ய நாடியவர் தவாபின் பின் ஸஈ செய்யவேண்டும். கிறான் அல்லது இப்றாத் முறைப்படி ஹஜ் செய்பவர் முதலில் ஸஈ செய்தால் அது ஹஜ்ஜுக்குரிய ஸஈயை வீழ்த்திவிடும். ஹஜ்ஜிற்காக மீண் டும் ஒரு முறை ஸஈ செய்யத் தேவையில்லை. ஸஈயின் பின் உம்றா மாத்திரம் செய்ய நாடினால், தலை முடியைக் கத்தரித்து விட்டு இஹ்றாமிலிருந்து விடுபடலாம். கிறான் அல்லது இப்றாத் முறைப்படி ஹஜ் செய்பவர்கள் இஹ்றாமிருந்து விடுபடாமல் எட்டாம் நாளன்று மினாவுக்குப் புறப்பட்டுச் செல்லவேண்டும். அங்கே பயணிகளைப்போன்று கடமையான தொழுகைகளில் நான்கு றகஅத் தொழுகைகளை இரண்டிரண்டாக உரிய நேர த்தில் சுருக்கித் தொழவேண்டும். மினாவிலும், ஏனைய புனித ஸ்தலங்களிலும் தங்கி இருக்கும் போது தல்பியா, தக்பீர், பிரார்த்னை, உட்பட எல்லா விதமான நல்லமல்களிலும் அதிகம திகமாக ஈடுபட வேண்டும்.

(அப்துல்லாஹ் பின் அப்துர்ரஹ்மான் அல் ஜிப்ரீன்)

துல் ஹஜ் (8) எட்டாம் நாளன்று
செய்யவேண்டியவை.

1–ஹஜ் செய்ய நாடிய ஒருவர் தாம் இஹ்றாம் மேற்கொள்ள முன் னர் குளித்து, மணம் பூசிக் கொள்வது விரும்பத்தக்கது.

2–தமத்து: முறையில் ஹஜ் செய்ய நாடி, உம்றாவை மேற்கொ ண்டு விட்டு, இஹ்றாமிலிருந்து நீங்கி இருப்பவர் இந்த நாளில் நடுப்பகலுக்கு முன்னர் ஹஜ்ஜிற்காக இஹ்றாம் மேற்கொள்வது சுன்னத்தாகும்.

3–ஹஜ்ஜிற்காக (லப்பைக்க ஹஜ்ஜன்) என நாவால் மொழிந்து மனதால் எண்ணிக்கொண்டு இஹ்றாம் அணிந்து கொள்ள வே ண்டும்.

4–பத்தாம் நாள் ஜம்றத்துல் அக்கபாவுக்கு கல்லெறியும் வரை
அதிகமதிகமாக தல்பிய்யாக் கூறவேண்டும்.

5–ளுஹர், அஸர், இஷா ஆகிய நான்கு றகஅத் தொழுகைகளை இரண்டு றக அத்துக்களாக சுருக்கித் தொழவேண்டும்.

6–பர்ழான தொழுகைகளை இமாமுடன் சேர்ந்து கூட்டாகத் தொழ வேண்டும். ஆரம்பத் தக்பீரைத் தவறவிடாமல் இருப்பது நல்லது.

7–வித்று தொழுவதில் கூடிய கவனம் செலுத்துதல். இரவின் இறுதிப் பகுதியிலோ அல்லது தூங்குவதற்கு முன்னரோ அல் லது இஷாத் தொழுகையை அடுத்தோ தொழுது கொள்ளலாம்.

அரபா (துல்ஹஜ் 9ம்) நாளில் செய்யவேண்டியவை.

1–சூரியன் உதித்ததும் அரபாவை நோக்கி தல்பியா, தக்பீர் கூறிக் கொண்டு செல்லல்.

2–வசதியிருப்பின், நடுப்பகலின் பின் நமிறா என்ற இடத்தில் இறங்கி சிறிது தாமதித்துச் செல்வது விரும்பத்தக்கது. (கட்டாயமில்லை)

3–அரபாவில் ளுஹர், அஸர் இரண்டையும் முற்படுத்தி சேர்த் தும், சுருக்கியும் தொழவேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தரித்திருப்பதற்கும், பிராத்திப்ப தற்குமுரிய நேரத்தை அதிகப்படுத்துவதற்காக இவ்வாறு செய் தார்கள்.

4–ஹாஜிகள், இப்புனிதமான தரிப்பிடத்தில் அல்லாஹ்வை நினைவு கூறுவதிலும், பிராத்தனை புரிவதிலும், அதிகம் முயற்சிக்க வேண்டும். பிராத்தனையின் போது கைகளை உயர் த்த வேண்டும். அத்தோடு இச்சந்தர்ப்பத்தில் தல்பியாக் கூறுவ தில் அல்லது குர் ஆன் ஓதுவதில் ஈடுபடுவதும் சிறப்புக்குரியதே.

5–அறபாவில் சூரியன் மறையும் வரைத் தரிதிருத்தல்

6–வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்குவதிலும், ஏனைய ஹாஜி சகோதர்களுக்கு நீர் புகட்டுவதிலும் ஈடுபடுவது நன்மை யான காரியமாகும்.

முஸ்தலிபா (10ம் நாள்) இரவில் செய்யவேண்டிவை

1–சூரியன் மறைந்த பின் அரபாவிலிருந்து அமைதியோடும், பய பக்தியோடும் முஸ்தலிபாவை நோக்கிச் செல்லல்.

2–அங்கு சென்றதும், பிரயாணப் பொதியை இறக்கிவைப்ப தற்கு முன் ம:.ரிப், இஷா இரண்டையும் ஒரு அதான், இரு இகாமத்துடன் சேர்த்தும், சுருக்கியும் தொழல்.

3–தொழுகையின் பின் எந்த வேலைகளிலும் ,ஈடுபடாமல் அவ சரமாகத் தூங்கி விடவேண்டும்.

4–முஸ்தலிபாவில் இரவில் தரிப்பது வாஜிபாகும். எனினும், இர வின் இறுதிப்பகுதியில் சந்திரன் மறைந்த பின்னர், ஆண்களிலும், பெண்களிலும் பலவீனமானவர்களும், அவர்களுக்கு உதவ க்கூடியவர்களும் அங்கிருந்து (மினாவை நோக்கி) வெளியேறிச் செல்லலாம். எனினும ' பலவீனர்களுக்கு உதவுபவராக, அல்லது பலவீனராக இல்லாதிருப்பவர்கள் பஜ்ர் தொழும் வரை முஸ்த லிபாவில் தங்கி இருக்கவேண்டும். இவ்வாறு செய்வதுதான் இறைத்தூதர் அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதாகும்.

5–பஜ்ர்த் தொழுகையை அதன் ஆரம்ப நேரத்திலேயே நிறை வேற்றி விட்டு, மஷ்அருல் ஹறாம் எனுமிடத்தை நோக்கிச் செ ன்று, அங்கே நன்கு வெளிச்சமாகும் வரை அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி,தக்பீர் கூறி, தான் விரும்பியதைப் பிராத்தித்துக் கொள்ளலாம். மஷ்அருல் ஹறாமுக்குச் செல்ல வசதி ஏற்படா விட்டால், தான் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே பிரா த்தனையில் ஈடுபடலாம். நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இது பற்றி பின் வருமாறு கூறியுள்ளார்கள். ஷஷநான் இங்குதான் தரித்தேன். மேலும், இந்த இடமும் அறபா வைச் சார்ந்ததுதான்.

துல் ஹஜ் 10ம் நாளான பெருநாள் தினத்தன்று
செய்ய வேண்டியவை:

1–முஸ்தலிபாவிலிருந்து சூரிய உதயத்திற்கு முன்னர் அமைதியு டனும், பயபக்தியுடனும் தல்பியாக் கூறியவர்களாக மினாவை நோக்கிச் செல்லல்.

2–க்ஷக்ஷவாதி முஹஸ்ஸர்** எனும் இடத்தைக் கடந்து செல்லும் போது முடிந்தால் சிறிது வேகமாகச் செல்லல்.

3–ஜம்றதுல் அகபாவைச் சென்றடையும் வரை தல்பியாக் கூறு வதில் ஈடுபடல். மினாவை தன் வலப்பக்கமாகவும், கஅபா வைத் தன் இடப்பக்கமாகவும் ஆக்கிக் கொண்டு, தக்பீர் கூறிய வண்ணம் ஜம்றதுல் அகபாவை நோக்கி ஒன்றன்பின் ஒன்றாக ஏழு கற்கள் எறிய வேண்டும்.

4–பின்னர் ஹத்யு (பிராணி அறுத்து) கொடுக்கவேண்டும். அதி லிருந்து தானும் சாப்பிட்டு விட்டு, ஏழைகளுக்கும் பங்கிட வே ண்டும். தமத்து∴ அல்லது கிரான் முறைப்படி ஹஜ் செய்பவர் கள் மீது ஹத்யு கொடுப்பது வாஜிபாகும்.

5–தலை மயிரை சிரைத்தல், அல்லது கத்தரித்தல். ஆயினும் சிரைப்பதே சிறந்தது. தலை முடியில் சிலதை மாத்திரம் கத்தரி
ப்பது, தலை முடியைக் கத்தரித்ததாக ஆகாது. மாறாக தலை யின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் முடி கத்தரிக்கப்பட வே
ண்டும். பெண்ணைப் பொறுத்தமட்டில் தன் தலை முடியை ஒன்றாகச் சேர்த்து விரல் நுணியளவு கத்தரிக்கவேண்டும்.

6–ஜம்றதுல் அகபாவுக்கு கல்லெறிந்து, தலை மயிரைச் சிரை த்து அல்லது கத்தரித்த பின் ஒரு ஹாஜிக்கு இஹ்றாம் மூலம் விலக்கப்பட்வைகளுள் தாம்பத்திய (கணவன், மனைவி உடல்) உறவைத் தவிர மற்றவைகள் அனைத்தும் ஆகுமாக்கப்பட்டு
விடும். இதற்கு க்ஷக்ஷஅத்தஹல்லுலுல் அவ்வல்** எனப்படும். கல் லெறிதல், தலைமயிர் சிரைத்தல் அல்லது மொட்டையடித்தல், தவாப் ஆகிய மூன்றில் இரண்டைச் செய்து முடித்தால் க்ஷக்ஷஅத்த ஹல்லுலுல் அவ்வல்** உண்டாகிவிடும்.

7–இச் சந்தர்ப்பத்தில் இஹ்றாமிலிருந்து நீங்கி, தன்னைச் சுத் தப்படுத்தி, மணம் பூசிக்கொண்டு தவாபுல் இபாழாவிற்காக மக்கா செல்வது சுன்னத்தாகும். இத்தவாபிற்கு தவாபுல் ஸியாறா எனவும் கூறப்படும். இது ஹஜ்ஜின் அடிப்படைகளில் ஒன்றாகும். இது இன்றி ஹஜ் நிறைறோது. இத்தோடு இஹ் றாமின் காரணமாக விலக்கப்பட்டிருந்த அனைத்தும் (தாம்ப த்திய உறவு உட்பட) ஹலாலாஹி விடுகிறது.

8–தமத்து∴ முறையில் ஹஜ் செய்பவர் இந்தத் தவாபின் பின் னர், ஸபா, மர்வா ஆகியவற்றுக்கிடையில் ஸஈ செய்யவேண்டும்.

இப்றாத் அல்லது கிறான் முறையில் ஹஜ் செய்பவர் ஆரம்ப தவாபுடன் ஸஈ செய்திராவிட்டால் இச்சந்தர்ப்பத்தில் ஸஈ செய்ய வேண்டும்.

9–பிராணி அறுப்பதைக் கல்லெறிவதற்கு முன்னரோ அல்லது தவாபை பிராணி அறுப்பதற்கும், கல்லெறிவதற்கும் முன்னரோ அல்லது தலை மயிர் சிரைப்பதை மேற்கூறப்பட்ட அனைத்து க்கும் முன்னரோ செய்தாலும் நிறைவேறிவிடும். ஹாஜி தனக்கு இலகுவானதிலிருந்து ஆரம்பம் செய்யலாம். முதலில் கல்லெறி தல், பின்னர் பிராணி அறுத்தல், பின்னர் தலைமயிர் சிரைத்தல், பின்னர் தவாப் செய்தல் என்ற ஒழுங்கில் செய்வதே சிறப்புக்கு ரியது என்றிருந்தாலும் ஹாஜி தனக்கு சிரமமில்லாது இருப்ப தற்காக இவற்றை ஒன்றை விட மற்றொன்றை முற்படுத்தியோ பிற்படுத்தியோ செய்து கொள்ளலாம்.

அய்யாமுத் தஷ்ரீக் (துல்ஹஜ் 11, 12, 13 ஆம்) நாட்க்களில் செய்யவேண்டியவை:

1–மூன்று ஜம்றாக்களுக்கும், முதலில் ஜம்றதுல் ஸுக்ரா, பின்னர் ஜம்றதுல் வுஸ்தா, இறுதியில் ஜம்றதுல் அகபா என்ற ஒழுங்கில் கல்லெறிதல்.

ஒவ்வொரு ஜம்றாவுக்கும் ஏழேழு ~~கற்கள் எறிவதோடு, ஒவ்வொரு~~ கல்லின்போதும் அல்லாஹு அக்பர் எனக் கூ றவே ண்டும். அவசரமாக ஹஜ்ஜை முடித்துக்கொண்டு வெளியேற விரும்பினால் 11ம், 12ம் நாட்க்களில் மாத்திரம் இம் மூன்று ஜம்றா க்களுக்கும் கல்லெறிய வேண்டும். அவசரமில்லாதிருப்பின் 13ம் நாளிலும் இருந்து, இம்மூன்று இடங்களுக்கும் கல்லெறிய வேண்டும்.

2–ஜம்றதுல் ஸுக்றா, ஜம்றதுல் வுஸ்தா இரண்டிற்கும் கல்லெ றிநிந்து விட்டு, வலது புறமாக சிறுது நகர்ந்து சென்று கிப்லா வை முன்னோக்கி தன் இரு கைகளையும் உயர்த்தி, ஸூறதுல் பகறா அளவுக்கு பிராத்தனையில் ஈடுபடலாம். ஜம்றதல் அகபாவிற்கு கல்லெறிந்த பின் பிராத்தனையில் ஈடுபடுவது கூடாது.

3–மினாவில் இரவில் தரித்தல்,இது வாஜிபான ஒரு விடயமாகும்.

4–ஹஜ்ஜின் இறுதிக் கிரியையான க்ஷக்ஷதவாபுல் வதா** எனப்படும் பிரியாவிடைத் தவாபை நிறைவேற்றல்.

5–இம் மூன்று நாட்க்களையும் அல்லாஹ்வை நெருங்கக்கூடிய அமல்களான குர்ஆன் ஓதுதல், திக்ர், தக்பீர் போன்றவற்றில் கழிப்பது சிறப்புக்குரியதாகும்.

தவாபின் பின் செய்யவேண்டியவை:

இச்சந்தர்ப்பத்தில், புனித ஹஜ் கடமையை எவ்வித சிரமமுமி ன்றி இலகுவாக நிறைவேற்றுவதற்கு உனக்கு அருள் புரிந்து, உனது அனைத்து விடயங்களையும் உனக்கு இலகு படுத்தித் தந்த அல்லாஹ்வை நினைவு கூறவேண்டும். அல்ஹம்து லில்லாஹ்.

எனவே, எமக்கு அவன் அருளியிருக்கும் அளப்பெரிய இவ்வ ருட் கொடைகளுக்கு நன்றி கூறவேண்டும். குறிப்பாக ஹஜ்ஜுக் கடமைகளைச் தொடர்ச்சியாகவும், ஒழுங்காகவும் செய்து முடித்தது போன்று, தொடர்ந்தும் அவனுக்குப் பணிந்து நடக்க வேண்டும். க்ஷக்ஷநிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னு டைய அறுப்பு (குாபானியு)ம், என் வாழ்வும், என் மரண மும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித் தானவையாகும். என்று (நபியே) நீர் கூறுவீராக! அவனு க்கு யாதொரு இணையுமில்லை. இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன். இன்னும் (அவனுக்குக் கீழ்ப படிந்த) முஸ்லிம்களில் (இந்த உம்மத்தில்) நான் முதன்மை யானவன் என்றும் (நீர் கூறுவீராக!** (6: 162,163)

ஒரு வணக்கம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்க்கான அடையா ளம், அதனைத் தொடர்ந்தும் வணக்கங்களில், ஈடுபடுவதாகும். எனவே ஸாலிஹான அமல்களைச் செய்வதில் அதிக கவனம் செலுத்துவதோடு, அவற்றை உன்னிடமிருந்து ஏற்றுக் கொள்வ தற்காக அல்லாஹ்விடத்தில் சதாவும் பிரார்த்தித்துக் கொள்ள வும் வேண்டும்.

புகழனைத்தும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே உரியது!